(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 11(7).]

# பாராளுமன்றம்

## 11 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 யூலை 11 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 யூலை 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4590/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயங்கி வரும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்பாக பேணி வரப்படுகின்ற பதிவேடொன்று அமைச்சில் உள்ளதா என்பதையும்;

(ii) அதன்படி, தற்போது காணப்படும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அனைத்து பாடசாலைகளும் மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளை பதிவு செய்கின்றபோது பயன்படுத்தப்படும் பிரமாணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிருவாகிகளுக்கு இருக்க வேண்டியதென அமைச்சு அங்கீகரித்துள்ள குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் மற்றும் நிருவாகிகள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதையும்;

(iii) முன்பள்ளிகளை மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்துவதற்கும், அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கமத்தொழில் அமைச்சர்,— பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 10 ஆம் திகதிய 1870/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கால விதிப்பு (திருத்தம்ச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.**

# 2014 யூலை 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3961/ '13

கௌரவ புத்திக பதிரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியாவின் பட்டியாலா பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் 2013.02.24 முதல் 2013.02.28 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆறாவது தெற்காசிய பல்கலைக்கழக கலாசார விழாவில் பங்கேற்ற அழகியற் கலை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய குழு மிகத் திறமையான குழுவாகவும் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகவும் தெரிவு செய்யப்பட்டதாக இந்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன என்பதையும்;

(ii) எனினும், மேற்படி விழாவின் போது கலாசார அம்சங்கள் சமர்ப்பிக்கப்பட்டதேயன்றி போட்டிகள் இடம்பெறவில்லை என்பதையும்;

(iii) மேற்படி விழாவில் பங்கேற்றமைக்கான சான்றிதழ் ஒன்றை மாத்திரம் பெற்றுக்கொண்ட இக்குழுவை முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகக் காட்டி கௌரவ உயர் கல்வி அமைச்சர் உள்ளிட்ட கல்விமான்களை அழைத்து பெருந்தொகையான பணத்தை செலவிட்டு போலியான பாராட்டு விழாவொன்று நடாத்தப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி மோசடியான செயல் அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் திரு. ஜயசேன கோட்டேகொடவினால் தனது புதல்வரான திரு. ஜானக கோட்டகொடகேவிற்காக மேற்கொள்ளப்பட்டதென மேற்படி பல்கலைக்கழகத்தின் கட்புலக் கலைகள் பீடத்தின் மாணவர் சங்கத்தின் செயலாளர் குற்றம்சாட்டுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மோசடிச் செயல் சம்பந்தமாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடாத்தி தவறாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5029/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கலை மன்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கலை மன்றங்களில் இயங்கும் நிலையிலுள்ள கலை மன்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த ஐந்தாண்டுகளினுள் மூடப்பட்டுள்ள கலை மன்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கலை மன்றங்கள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கலாசார அலுவலல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலை மன்றங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், கலை மன்றமொன்றுக்கு வருடாந்தம் வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகை இறுதியாக அதிகரிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலை மன்றங்களை மேற்பார்வை செய்வதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறையியல் மற்றும் அதில் இணைந்து செயலாற்றுகின்ற அலுவலர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2014 ஓகத்து 05, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2627/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை கடற்றொழில் துறைக்காக வருடாந்தம் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட பணத் தொகை அந்தந்த வகைகளுக்கு போதுமானதாக அமைந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3240/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டுக்கான மற்றும் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) இந் நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) இந்நிறுவனத்தில் மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3268/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்தோறும் "சேவை இல்லம்" அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) "சேவை இல்லம்" அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது;

(iv) முதலாவது "சேவை இல்லம்" அலுவலகம் நிர்மாணிக்கப்படுவது எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3447/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்காக பூர்த்தி செய்திருக்கவேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை;

(ii) வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித்தனியாக யாவை;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் சேவையாற்றுகின்ற கல்வி வலயங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாணத்தில் சேவையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I, II, மற்றும் III ஆம் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற இடங்கள் யாவை;

(iii) இலங்கை கல்வி நிர்வாகச் சேவைத் தகைமைகள் இன்றி மேற்படி மாகாணத்தில் சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் சேவையாற்றுகின்ற கல்வி வலயங்கள் யாவை;

(v) மேற்படி பதவிக்கு தகைமைகளற்ற ஆட்கள் நியமிக்கப்பட்டமையின் அடிப்படை யாது;

(vi) தகைமைகளற்ற ஆட்கள் தமக்கு உரித்தற்ற பதவிக்கு மேலே குறிப்பிட்டவாறு நியமனம்பெற்று முறைகேடான விதத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றிருப்பின் அப்பணத்தை மீளஅறவிட நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3651/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெலிபிட்டிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை வெலிபிட்டிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவார?

(இ) இன்றேல், ஏன்?

3688/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமென ஒரு அரச நாடக விழாவே நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) ஆண்டுதோறும் நடாத்தப்படவேண்டிய மேற்படி விழா, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்பட்டமைக்கு நிதி இன்மையே காரணமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்ட அரச நாடக விழாவுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச அனுசரணையுடன், தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கேற்றக்கலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட "மஹ சமயம" நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கிடைத்த விதம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கெனவும் குறித்த பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4433/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இந்திய பாதுகாப்பு அமைச்சரால் லோக் சபாவில் வெளியிடப்பட்ட கூற்றுக்கு அமைவாக இந்தியா இலங்கையிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி ஆயுத கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதி தென்பதையும்;

(iii) இந்தியாவினால் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆயுத விற்பனையின் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கலின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற அறிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4505/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் (CHOGM) பங்கேற்ற அரச தலைவர்கள் மற்றும் அதிதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சுற்றுலாத்துறை ஹோட்டல்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி மாநாட்டில் பங்கேற்ற அதிதிகளுக்காக உணவு வழங்கலை மேற்கொண்ட ஹோட்டல்களின் எண்ணிக்கை யாது;

(iv) இதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4521/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தை மையமாகக் கொண்டு இலங்கைக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடிக்க இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அத்தகைய அனுமதியின் பேரில் தற்போது அக்கடற் பிரதேசத்தில் மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் மற்றும் அக்கம்பனிகள் சொந்தமாயுள்ள நாடுகள் யாவை;

(iii) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்புடையதாக அக்கம்பனிகளால் கடைப்பிடிக்கப்படவேண்டிய சட்டவிதிகள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4588/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சூதாட்ட விதிப்பனவு மற்றும் பிற தொடர்புடைய வரிகளின் கொடுப்பனவுக்காக "மெரினா கொழும்பு" என்ற பெயரில் அல்லது இதே போன்ற ஒரு பெயரில் ஒரு கசினோ பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது முதல் முறையாக எப்போது பதிவு செய்யப்பட்டது என்பதையும்; மற்றும்

(iii) மேற்படி கசினோ எந்தப் பெயரின் (தனிநபர் அல்லது நிறுவனம்) கீழ் பதிவு செய்யபட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4714/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி குலுகம்மன, 122 ஆம் இலக்க இடத்தில் வசிக்கும் திரு.என்.பீ.எம். தவ்பீர், வத்தேகம கல்வி வலயத்திற்குரிய க/வ/ அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக (அதிபர் சேவை தரம் II) பதவி வகிக்கையில், சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்காக 2008.03.01 ஆம் திகதி எழுத்துமூல வேண்டுகோளொன்றை முன்வைத்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2011.05.30 ஆம் திகதிக்கு 60 வயதைப் பூர்த்தி செய்த திரு.தவ்பீரை ஓய்வு பெறச் செய்வதை தாமதப்படுத்துவதற்கான காரணம் யாது என்பதையும்;

(ii) முதல் நியமனம் கிடைத்தது 1971.10.03 ஆம் திகதி தொடக்கம் மூன்று தசாப்தங்களாக திருப்திகரமாக நிறைவேற்றிய சேவையைக் கவனத்திற்கொண்டு இவரை தாமதமின்றி ஓய்வு பெறச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

4741/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் உள்ள பாடசாலைகளில் 06 ஆவது தரத்திலிருந்து உயர்தரம் வரை அழகியற்கலை பாடங்கள் கற்பிக்கப்படும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) குருணாகல் மாவட்டத்தில் உள்ள அத்தகைய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குருணாகல் மாவட்ட பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் நாடகமும் அரங்கக் கலையும் ஆகிய அழகியற்கலை பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மாவட்டத்தில் அழகியற்கலை ஆசிரியர்களின் தேவைப்பாடு உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4797/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக 1994இல் நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றறுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அபேட்சகர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்ட வெட்டுப்புள்ளி (Cut off marks) எவ்வளவு;

(iii) பரீட்சை இலக்கம் 01381இன் கீழ் குறிப்பிட்ட பரீட்சைக்கு தோற்றி 850 புள்ளிகளில் 421 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட கல்கமுவ மஹகல கந்தவில, மெதகம, இல.36 இல் வசிக்கும் எல்.எ. நிமல் என்பவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாமைக்கான காரணம் யாது;

(iv) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமையினால் எல்.எ. நிமல் என்பவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(v) ஆமெனில், எல்.எ. நிமலுக்கு வழங்கக்கூடிய நிவாரணம் யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4818/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் குண்டசாலைத் தொகுதியைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்களும் 500 மாணவர்களும் பயன்படுத்துகின்ற கல்ஏதண்ட, வளல வரையான கிட்டத்தட்ட 2 கிலோ மீற்றர் வீதி வாகனம் ஓட்டுவதற்கு முடியாத அளவுக்கு கடுமையாக சிதைவடைந்தும் அரிப்புக்கு இலக்காகியும் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதியைத் துரிதமாக திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4842/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின், கண்டவாழை பிரதேச செயலக பிரிவில் தர்மபுரம் கிராமத்தில் தபால் அலுவலகத்திற்கென நிரந்தர கட்டிடமொன்று இல்லை என்பதையும்;

(ii) 1958 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தர்மபுரம் கிராமம் மற்றும் அதனை சுற்றிலுமுள்ள பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தமது தபால் சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தனியார் வீடுகளில் இயங்கிவந்த தர்மபுரம் தபால் அலுவலகத்தை பயன்படுத்தி வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தர்மபுரம் தபால் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 ஓகத்து 06, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2642/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு பொருத்தமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபா 2 இலட்சத்தை விஞ்சாத கடன்தொகையொன்றை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3272/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் பஸ் எனும் எண்ணக்கரு நாட்டில் பொதுப் போக்குவரத்து முறைமைக்கு உதவியுள்ளதா என்பதையும்;

(ii) அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள தனியார் பஸ் இயக்குனர்களின் எண்ணிக்கையினை மாவட்ட அடிப்படையிலும்;

(iii) தற்போது இயங்குகின்ற தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்; மற்றும்

(iv) இந்த பஸ்கள் யாவும் அனுமதிப்பத்திரங்களுடனா இயங்குகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்கத்திடமிருந்து தனியார் பஸ் இயக்குனர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளையும்;

(ii) நாடு தழுவிய ரீதியில் தனியார் பஸ் தொழிற்துறையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள மொத்த ஆசன வசதிகளையும்; மற்றும் ;

(iii) பஸ் ஒன்றினால் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வருடமொன்றிற்கு ஈட்டப்படும் வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3701/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்ற அரச மற்றும் தனியார் எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் யாவை;

(ii) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வருடாந்தம் செலுத்திய வரியின் அளவுகள், ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வரி செலுத்துகையில் ஏதேனும் ஒரு கம்பனிக்கு ஏதேனும் வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(v) இத்தகைய வரிச் சலுகையை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

(vi) கடந்த பத்து வருட காலப் பகுதியினுள் மேற்படி வரி விடுவிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இழந்துள்ள வரித் தொகை ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வருடாந்தம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3824/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழுள்ள போதனா ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பணியாற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளர்கள் சார்பில் துப்பரவேற்பாட்டு தொழிலாளர்கள் நிறைவேற்றுகின்ற கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர் களுக்காக கொடுப்பனவுகள் உட்பட சம்பளமாக வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012ஆம் ஆண்டில், ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணம் செலுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3919/ '13

கௌரவ புத்திக பதிரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கும் விரைவாக பழுக்க வைப்பதற்குமாக சில வர்த்தகர்கள் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்களின் விஞ்ஞான மற்றும் இரசாயனப் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி இரசாயனப் பொருட்களில் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழங்களை பழுக்க வைப்பதற்காகவும் நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்காகவும் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்ட அத்தகைய வர்த்தகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4506/ '13

கௌரவ சஜீவ சேனசிங்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக பத்து ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ள மேற்படி ஆகாய விமானங்களுக்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை யாது;

(iii) மேற்படி ஆகாய விமானங்கள் எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) விமானக் கம்பனி 2013 சனவரி முதல் இற்றைவரை அடைந்துள்ள நட்டம் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அதிகளவு நட்டத்துடன் பேணிவரப்படுகின்ற ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஏற்பாடுகள் பெறப்படுகின்ற விதம் யாது;

(iii) மேற்படி புதிய ஆகாய விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை அங்கீகரிக்கிறாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4522/ ' 13

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சக்தியூட்டும் பானமொன்றாக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள "ரெட் புள்" எனும் பானத்தை உள்நாட்டு சந்தையில் விளம்பரப்படுத்துவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இப்பானத்தை அருந்துவதன் மூலம் ஏற்படும் பக்கவிளைவுகளை கவனத்திற்கொண்டு, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை இதனைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கையில், மீண்டும் இப்பானத்தை இறக்குமதி செய்வதற்காக சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4737/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ, பன்சல்ஹேன வீதி, இலக்கம் 9/1 இல் வதியும் திரு. ஏ.ஏ சாப்ஜு 38 ஸ்ரீ 6185 இலக்கமுடைய மஹேந்திரா ஜீப் வண்டியை அதன் ஆரம்ப உரிமையாளராகிய திருமதி. பீ. விஜேசூரியவிடமிருந்து கொள்வனவு செய்து, அந்த மோட்டார் வாகனத்தின் பதிவினை உத்தியோகபூர்வமாக இவரது பெயருக்கு மாற்றும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் விண்ணப்பப்படிவமொன்றை (இலக்கம் TR 200760250) மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தியுள்ளார் என்பதையும்;

(ii) பலவருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் இதுவரை மேற்படி வாகனத்தின் சட்டபூர்வமான ஒப்படைப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வாகனத்தின் பதிவுரிமையை திரு. சாப்ஜுவின் பெயருக்கு ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4749/ ' 14

கௌரவ அசோக் அபேசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மாகாண சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) பிரதேச சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் தற்போது காபட் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4845/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல்மின் நிலையம் தரமற்ற மின்நிலையமென வலு, சக்தி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மின்நிலையத்தின்,

(i) முதலாம் கட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) தரம், உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு நிலைமை சம்பந்தமாக ஏற்புடைய நிர்மாணிப்புக் கம்பனியுடன் உத்தரவாதக் காலப்பகுதியுடனான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததா;

(iii) தரமற்ற நிலைமை மற்றும் இடம்பெறுகின்ற செயலிழப்புக்கள் சம்பந்தமாக மின்நிலையத்தை நிர்மாணித்த கம்பனிக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

(iv) திருத்தவேலைகளுக்காகவும் அக்காலப்பகுதியில் இழந்த மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் செலவாகிய பெருந்தொகைப் பணத்தை அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா;

(v) முதலாம் கட்டத்தை சரிவர நிர்மாணிக்காத கம்பனியே அதன் அடுத்த கட்டங்களையும் நிர்மாணிப்பதாயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் மின்சாரத்தை உற்பத்திசெய்ய திட்டமிடப்படுள்ளதா;

(ii) மின்சாரக் கட்டணப்பட்டியல் குறைவடைய ஏதுவாக அமையக்கூடிய அத்திட்டம் காலவரையறைகள் சகிதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4852/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சூதாட்ட அலுவல்களை நடத்துவதற்காக உண்ணாட்ரசிறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பதிவுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) இப்பதிவுகள் வழங்கப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட பதிவுகள் வழங்கப்பட்ட சரியான திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4865/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடிகாமம், எரியான்பிட்டி மயானத்திற்கான நுழைவுப் பாதையானது பயணம் செய்வதற்குப் பொருத்தமற்ற நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) மழை காலங்களில் மேற்படி மயானத்திற்கு பிரவேசிக்க முடியாதவாறு வீதியிலுள்ள கிடங்குகளில் மழைநீர் நிரம்பிக் காணப்படுவதால் சடலங்களை எடுத்துச் செல்லும்போது மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொடிகாமம், எரியான்பிட்டி மயானத்திற்கான நுழைவுப் பாதையை மறுசீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4908/ '14

கௌரவ ஆர். எம் ரஞ்சித் மத்துமபண்டார,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகல, எத்திமலேவெவ, வைத்தியசாலைக்கு எதிரில், இலக்கம் 127/1இல் வசிக்கும் திரு. டபிள்யு. எம். வீரசிங்ஹ நிலஅளவைத் திணைக்களத்தில் நிலஅளவைக் கள உதவியாளராக (டபிள்யுஈ/டபிள்யு/158) சேவையாற்றினாரென்பதையும்;

(ii) பொலநறுவை, புதிய நகரத்தில் நிலஅளவையாளர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியின் *சீஜீ*/1/1/1/வீ/460 இலக்க 2004.08.20 திகதிய கடிதம் மூலமாக அவரது தொழில் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. வீரசிங்ஹவின் தொழில் இடைநிறுத்தத்திற்கு ஏதுவாக அமைந்த பதுளை மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட 91/2003 ஆம் இலக்க வழக்கு சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் 2012.11.02 ஆந் திகதி இவர் குற்றமற்றவரென விடுதலை செய்யப்பட்டுள்ளமையால் தொழில் இடைநிறுத்தப்பட்ட நாளில் இருந்து இவருக்கு உரித்தான நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கும் இவருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4952/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் மஹவெவவில் இருந்து கட்டுநேரிய வரையான கடற் பிரதேசத்தில் கரையோரம் தீவிர கடலரிப்புக்குள்ளாகி வருகின்றமையை அறிவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) அந்நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரும்கூட கடலரிப்பினைத் தடுக்க இயலாமல் போயுள்ளதா;

(iii) ஆமெனில், ஏன்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற கடலரிப்பினால் அழிவடைந்துள்ள மற்றும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ள வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(ii) அழிவடைந்துள்ள வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு நட்டஈடு செலுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா;

(iii) அந்நட்டஈட்டுத் தொகையை மதிப்பிடுகின்ற முறையியல் யாது;

(iv) கடலரிப்பு காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் பொது வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4962/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஆண்டு உர மானியம் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிர் வகைகளுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு?

(ஆ) (i) உர மானியத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தொடக்கம் வழங்கப்பட்ட ரூபா 350/- உரப் பொதியொன்றுக்கு ரூபா 150/- காப்புறுதித் தொகையாக மேலதிகமாக அறவிடப்பட்டதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மானியத்தின் கீழ் வழங்கப்படும் ஓர் உரப்பொதிக்காக ரூபா 150/- மேலதிகமாக அறவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதியின் அடிப்படை யாது;

(iii) மேற்படி காப்புறுதி ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி காப்புறுதியின் கீழ் உரிமைக் கோரல்களுக்காக நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 ஓகத்து 07, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2652/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய 25 பிரதான நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், தாபிக்கப்பட்டுள்ள மேற்படி தகவல் தொழில்நுட்ப நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதான நகரத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3273/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரயில் பாதைகள் பகிர்வு அல்லது புகையிரதங்கள் பகிர்வு எண்ணக்கருவில் தனியார் கம்பனிகள் எப்போது ஈடுபட்டன என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களின் பெயர்களையும்;

(iii) அவை சேவை வழங்கும் பிரதேசங்களையும்;

(iv) புகையிரதத் திணைக்களத்தால் இதுவரையில் அறவிடப்பட்ட கட்டணங்களுக்கு எதிராக அவர்கள் அறவிடும் கட்டணங்களையும்;

(v) இச்சேவையை வெளித்தரப்பிடம் ஒப்படைத்த காரணத்தினால் புகையிரத திணைக்களத்திற்கு ஏற்பட்ட சந்தர்ப்பச் செலவின இழப்பையும்;

(vi) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள கால அளவையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3626/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் புதிதாக இடப்பட்ட"சன்விச்" ஓட்டப் பாதையை திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விடயத்தை ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அவ்வாறெனின், அக் குழுவின் உறுப்பினர்கள் யார்;

(iii) மேற்படி குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) மேற்படி குழுவின் சிபாரிசுகள் யாவை;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஓட்டப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட கம்பனி அல்லது நபர்கள் யாவர்;

(vi) இதன் நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக சனாதிபதி புலனாய்வுப் பிரிவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3714/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்தினால் கல்வி நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்த அடிப்படை யாது என்பதையும்;

(ii) இதற்கமைய கடந்த 03 வருட காலப்பகுதியில் கல்வி நிதி உதவி வழங்க தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி உதவி பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட உதவித் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3827/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவில், தியதித்த வாவி வீதியில் வீடமைப்புத் திட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு, வீடு பெறுனர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பணத்தொகை உதவியாகவா அல்லது கடன் தொகையாகவா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீடு பெறுனர்களுக்கு,

(i) வழங்கப்பட்டுள்ள காணித் துண்டின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளின் அறுதியுரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில்,

(i) நிர்மாணிக்கப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் குடியமர்வுக்கென வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் குடியமராதுள்ள வீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3920/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் C.F.L. மின் குமிழ்கள், குழாய் மின்விளக்குகள் (ரியூப் லைட்) மற்றும் கையடக்க தொலைபேசிகள் பாவனை பாரிய அளவில் அதிகரித்திருப்பதென்பதையும்;

(ii) மேற்படி உபகரணங்களின் பாவனை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து சுற்றாடலில் சேர்க்கின்ற பாதரசம் மற்றும் கெட்மியத்தின் அளவு அதிகரிக்கின்றது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(அ) அப்புறப்படுத்தப்படுகின்ற C.F.L. மின் குமிழ்கள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் குழாய் மின்விளக்குகள் ஆகியவற்றின் மீள்சுழட்சிக்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) உலகத்தில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் நீருடன் சேர்கின்ற பாதரசம் மற்றும் கெட்மியம் பற்றி பரிசோதிப்பதற்காக விசேட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் அத்தகைய உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய உபகரணங்களின் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4507/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை அதன் பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) அம்பாந்தோட்டை துறைமுகத்தினூடாக ரூபா 420 மில்லியன் வருமானம் கிடைத்துள்ளதென்பதை நிரூபிப்பாரா;

(iii) அத்துறைமுகத்தினூடாக வாகனங்களை இறக்குமதி செய்ததன் மூலமாகவும் மீள்-ஏற்றுமதி செய்ததன் மூலமாகவும் இற்றைவரை ஈட்டியுள்ள வருமானம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் அனைத்துவிதமான ஏற்றுமதிகளும் மீள் - ஏற்றுமதி செய்யப்படுகின்ற வாகனங்களை தரையிறக்குதல் மற்றும் கப்பலேற்றுதலும் கொழும்புத் துறைமுகத்திலேயே மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(ii) நியாயமான காரணமின்றி அந்நடவடிக்கைகளை கொழும்புத் துறைமுகத்தில் இருந்து அகற்றி அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கொண்டுசென்றதன் மூலம் வாகன இறக்குமதியாளர்களுக்கு அதிக கிரயத்தை ஏற்க நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகில் சர்வதேச கடல் மார்க்கத்தினூடாக நாளொன்றுக்கு ஏறக்குறைய 400 கப்பல்கள் பயணிக்கின்றனவா;

(ii) அக்கப்பல்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4523/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதேச மருத்துவத்துறை அமைச்சு அமைந்துள்ள வளவினுள் நடப்பட்டுள்ள வெள்ளைச் சந்தன மரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இந்த வெள்ளைச் சந்தன மரங்களில் குறிப்பிட்டதொரு எண்ணிக்கையை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அம்மரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இம்மரங்களை வெட்டி அகற்றுவதற்கான நோக்கம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டவாறு வெட்டி அகற்றப்பட்ட வெள்ளைச் சந்தன மரங்கள் சந்தைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், சந்தைப்படுத்தப்பட்ட வெள்ளைச் சந்தனத் தொகை மற்றும் அதன் பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4756/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத பட்டத்தில் சித்தியடைந்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத டிப்ளோமா சித்தியடைந்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி சபையில் பாரம்பரிய மருத்துவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படி சகல மருத்துவர்களினதும் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4814/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள், அரசியலமைப்பின் 103 (2) உறுப்புரையின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டியதாக எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களுக்கு அமைய செயற்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) இன்றேல், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4854/ '43

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2002 தொடக்கம் 2013 வரையான வருடங்களுக்குரிய ஏற்றுமதிகள், மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஏற்றுமதிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) ஆகியவற்றிற்கிடையயிலான விகிதாசாரத்தை வருடவாரியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4866/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நீண்டகாலமாக மறுசீரமைக்கப்படாதுள்ள யாழ்ப்பாணம் ஜும்மா மஸ்ஜித் வீதியில் காணப்படுகின்ற பள்ளம் குழிகளைக் கொண்ட நிலைமையின் காரணமாக மேற்படி வீதியில் பயணம் செய்வது சிரமமாக உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) 1868 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள மிகப் புராதனமான யாழ்ப்பாணம் ஜும்மா மஸ்ஜித்திற்கு வருகை தருகின்ற பக்தர்களினதும் அதனைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றவர்களினதும் வசதியின் பொருட்டு உடனடியாக மேற்படி வீதியை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4871/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்புகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தேசிய மின் முறைமை இதுவரையில் இழந்துள்ள மின் கொள்ளளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் கன்டென்சர் தொகுதிக்கு உப்பு அல்லது அதையொத்த ஏதேனும் இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்ட கூற்றில் உண்மை உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் குற்றவாளிகளான நபர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4953/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ தேர்தல் தொகுதியில் தோப்புதொட்டவில் இருந்து தங்கொட்டுவ – நாத்தாண்டி ஊடாக மஹவெவ வரையிலான வீதியின் நீளம் எவ்வளவு;

(ii) அவ்வீதியை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iii) அவ்வீதியின் நிர்மாணிப்பினை மேற்கொள்கின்ற கம்பனி யாது;

(iv) அக்கம்பனிக்கு நிர்மாணிப்பினை ஒப்படைக்கின்றபோது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்த வீதியின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) இந்த வீதியின் நிர்மாணிப்பை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4963/ '14

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பட்டப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) குறிப்பிட்ட பாடநெறியை கற்பதற்காக ஒரு வருடத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) கடந்த வருடத்தில் முகாமைத்துவ பட்டத்துக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 ஓகத்து 08, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2671/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவ படகுத்துறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி படகுத்துறைகளைத் தழுவியதாக மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2006 தொடக்கம் 2012 வரை நன்னீர் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை ஒவ்வொரு வருடத்திலும் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகையில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய கால எல்லையினுள் நன்னீர் மீன்பிடித்துறைக்காக போதுமானளவு பணம் ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கும் வேலைத் திட்டமொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அந்த வேலைத்திட்டம் நன்னீர் மீன்பிடித்தொழிலாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3276/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உலக வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன்களுக்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3718/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் ஒவ்வொரு போகத்திலும் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மொத்த நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நெல்லின் அளவானது ஒவ்வொரு போகத்திற்குமான மொத்த உற்பத்தியில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) கடந்த வருடம் நெல் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் நெல் கொள்வனவுக்காக பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட விலைகள், கொள்வனவு செய்த நபர்கள் மற்றும் அந்த ஒவ்வொரு நபரும் கொள்வனவு செய்த அளவு தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெல் கொள்வனவின் ஊடாக பெறப்பட்டுள்ள இலாபம்/ நட்டம் வருடாந்தம் தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3745/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது அரச சேவையில் உள்ள,

(i) மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி எண்ணிக்கையில் பெண் ஊழியர்களின் சதவீதம்;

(iii) அமைச்சுச் செயலாளர்களின் எண்ணிக்கை;

(iv) அமைச்சுச் செயலாளர் பதவி வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை;

(v) அமைச்சு செயலாளர் பதவி வகிக்காத இலங்கை நிருவாகச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை;

(vi) மேற்படி அ(v) இன் அலுவலர்களிடையே உள்ள பெண் ஊழியர்களின் எண்ணிக்கை;

(vii) ஒவ்வொரு தர மட்டத்திலும் உள்ள மேற்படி பெண் ஊழியர்களின் சதவீதம்

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3921/ '13

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 - 2005 கண்டி பெரும்பாக, கண்டி வடக்கு மற்றும் ஹாரிஸ்பத்துவ நீர் வழங்கல் திட்டத்தின் கட்டம் 1 ஆரம்பத்தின்போது பம்பி நிலையத்தின் மீதேன் மற்றும் பாதரசத்தை அகற்றுவதற்கான கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) தற்போது அத்தகையதொன்று செயற்படுத்தப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நீர் பம்பி நிலையத்தில் மீதேன் மற்றும் பாதரசத்தை அகற்றும் செயற்பாட்டினை மீண்டும் மேற்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பம்பி நிலையத்திலிருந்த உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட நீர் சுத்திகரிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் வடிகட்டியொன்று ( filter) காணாமற்போயுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அதன் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4129/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2013 'தயட்ட கிருள' நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

(ii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iv) ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பிலுமான ஒப்பந்தத்தை அமுல்படுத்திய நிறுவனம் யாது;

(v) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் தற்போதைய நிலைமை யாது

என்பதை தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4163/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011.11.26 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு தேதியில் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டதென்பதையும்,

(ii) இத் தீ விபத்து காரணமாக அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்திலிருந்த பெருமளவு வழக்குப் பொருட்களும் ஆவணங்களும் தீக்கிரையாகின அல்லது சேதத்திற்கு உள்ளாகின என்பதையும்;

(iii) வழக்குப் பொருட்களுக்கும் ஆவணங்களுக்கும் சேதம் ஏற்பட்டதால் இந் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்த வழக்குகள் பல வருடங்கள் தாமதடைந்துள்ளன என்பதையும்;

(iv) இத் தீ விபத்தின் பின்னர் சில வழக்குக் கோப்புகள் காணாமல் போயுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஏற்பட்ட மேற்படி தீ விபத்துக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இத் தீ விபத்துக்கு தீ மூட்டப்பட்டமையே காரணமாயிருப்பின், அதனோடு தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் நிலையம் யாதென்பதையும்;

(v) மேற்படி விசாரணைகளின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4524/ ’13

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் கணினி மென்பொருள் முறைமையொன்று தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இக்கணினி மென்பொருள் முறைமையை தாபிப்பதற்காக நிதி செலுத்தப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) இவ்வாறு தாபிக்கப்பட்ட கணினி மென்பொருள் முறைமையின் தரம் தொடர்பாக திருப்தியடையக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4613/ ’13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படை அங்கத்தவர்களின் சம்பளங்கள் சார்பில் 2013 ஆம் ஆண்டுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் முப்படை அங்கத்தவர்களின் சம்பளங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையில் கொழும்பு நகரை அழகுபடுத்தும் பொருட்டு ஒதுக்கப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கொழும்பு நகரை அழகுபடுத்துகின்ற வேலைத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகையில் கொழும்பு நகரை அழகுபடுத்தும் பல்வேறு நடவடிக்கைகளுக்காக உழைப்பை வழங்கிய முப்படை அங்கத்தவர்களுக்கு மேலதிக கொடுப்பனவேதும் செலுத்தப்பட்டதா என்பதையும்;

(v) மேலே (iv) இன் பிரகாரம் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனில், 2013 ஆம் ஆண்டுக்காக மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தித்திற்காக ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை மற்றும் அத் தொகை செலவிடப்பட்ட விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4757/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மத்திய அரசுக்கும், மாகாண சபைகளுக்கும் உரித்தான ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத பட்டதாரி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத டிப்ளோமாதாரி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாரம்பரிய மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் உள்ள பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத தாதிமார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத தாதிமார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) பதிவுக்காக விண்ணப்பித்துள்ள போதிலும், இதுவரை பதிவு செய்யப்படாதுள்ள ஆயுர்வேத தாதிமார்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4902/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய ஊழியர்களின் மாதாந்த சம்பளக் கொடுப்பனவுக்காக செலவாகும் மொத்தப் பணத்தொகை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் உள்ளூர் விமானப் பயண சேவைகளுக்காக மாத்திரம் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி விமான நிலையத்துக்குச் சொந்தமான ஏராளமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இரகசியமாக வேறு அரச நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4945/ '14

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் அப்போதைய ஆற்றுப்படுகை அபிவிருத்திச் சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட "பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தில்" சுமார் 50 – 60 வருடங்கள் பழைமைவாய்ந்த தேக்குமரப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றதென்பதையும்;

(ii) குறிப்பிட்டதொரு ஆள் போலி ஆவணங்களைத் தயாரித்து மேற்படி காணியை சொந்த அறுதி உரித்துடைய காணியாக அனுபவித்து வருகின்றார் என்பதையும்;

(iii) ஒரு சில ஆட்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான மேற்படி தேக்கு மரப் பயிர்ச் செய்கையை அழித்து வருகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பல வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ள பதுளுவெல பாதுகாக்கப்பட்ட வனத்தின் தேக்குமரக் காட்டை அத்துமீறியோர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4954/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புதிய பிரதான பஸ்தரிப்பு நிலையத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பஸ்தரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனி யாது;

(ii) அக்கம்பனியால் மேற்படி நிர்மாணிப்புக்காக பிறிதோர் நிறுவனத்திற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த உப ஒப்பந்தம் வழங்கப்படுகையில் முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா;

(iv) அவ்விதமாக உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவன உரிமையாளரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்பினை மேற்பார்வை செய்கின்ற நிறுவனம் யாது;

(ii) மேற்படி நிர்மாணிப்புகளை நிறைவுசெய்ய எடுக்கும் காலம் யாது;

(iii) நிர்மாணிப்பு நிறைவடைந்த பின்னர் மேற்படி பஸ்தரிப்பு நிலையத்தில் தரித்துவைக்கக்கூடிய பஸ்வண்டிகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4964/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல், மாவத்தகம பிரதேசத்தில் குறிப்பிட்ட அளவு காணியை பாற்பண்ணையொன்றை தாபிப்பதற்காக நெதர்லாந்து கம்பனியொன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதா;

(ii) ஆமெனில் அக்கம்பனிக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு;

(iii) மேற்படி காணி வழங்கப்படும் நெதர்லாந்துக் கம்பனியின் பெயர் யாது;

(iv) காணியை குறிப்பிட்ட கம்பனிக்கு விற்பனை செய்வதற்கான நிபந்தனைகள் யாவை;

(v) மேற்படி காணி பாற்பண்ணையொன்றை தாபிப்பதற்காக வழங்கப்படுவதற்கு முன்னர் எத்தகைய பணிக்காக பயன்படுத்தப்பட்டது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5167/ '14

கௌரவ ஜோன் அமரதுங்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், 179 ஆம் இலக்கம், எலபிட்டிவல கிராம அலுவலர் பிரிவின், நவம்மஹர கிராமத்திலுள்ள அரசாங்க காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அத்துமீறிக் குடியேறிய குடும்பங்களின் பிரதான குடியிருப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குடும்பங்களில் அதிகளவு குடும்பங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் மேற்படி கிராமத்தில் வசித்துவந்த போதிலும், இற்றை வரை இவர்களது காணிகளுக்கு நிரந்தர காணி உறுதியோ அல்லது தற்காலிக உரிமப்பத்திரமோ வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள் வசிக்கும் காணிகளுக்கு நிரந்தர காணி உறுதிகளை பெற்றுக்கொடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) நிரந்தர காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்கும் வரை தற்காலிக உரிமப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.18/ ' 10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்கச் சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளுக்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ ’10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.127/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பதிரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.175/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத்திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

கௌரவ புத்திக்க பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

கௌரவ புத்திக பதிரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.183/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய திடீர் விபத்துகளினால் உயிரிழந்த ஆட்களின் வாரிசுகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும், அவ்வாறான விபத்துகளினால் காயமடைந்த ஆட்களுக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சிரமமானதும் நீண்டதுமான நீதிமன்ற செயற்பாடொன்றில் பங்குபற்ற நேர்ந்துள்ளதால் அவர்கள் மிகவும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதனால், மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.186/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.187/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— அமைச்சர்களுக்கான பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் வரையறுத்தல்,— அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு (MSD ) ஊடாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடாது எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— "பீறலு" என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— "பீறலு" குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.190/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார காரணங்களுக்காக இளம் தாய்மார் இலங்கையை விட்டுச் செல்வதை தடுப்பதற்கான சட்டவாக்கம்,— தாய்மார்கள் ஒரு வலுவான மற்றும் சந்தோசமான குடும்ப சூழ்நிலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாலும் மற்றும் கடந்த காலங்களில் அத்தகைய தாய்மார்கள் வலுவான குடும்ப அலகின் மதிப்பை இல்லாதொழித்து பாரிய சமூக நெருக்கடியை உருவாக்கி இலங்கையை விட்டு தொழிலுக்காக வெளியேறியதாலும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இளம் தாய்மார்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கான பொருத்தமான சட்டவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.191/ '13

கௌரவ புத்திக பத்திரண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.192/ '13

கௌரவ புத்திக பதிரண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.193/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— "தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சிமுறையொன்றை உருவாக்கல்",— சுகாதார பராமரிப்பு முகாமைத்துவத்திற்கு இன்றுள்ள நிலைமையை விட அதிகளவான வழிகாட்டலும் முக்கியத்துவமும் வழங்கப்பட வேண்டியுள்ளதால் பிரதம அமைச்சருக்கு அறிக்கையிடுவதற்கும் நிரல் அமைச்சில் ஊடுருவிச் சென்று உச்ச பயனைப் பெறாத நிலைமையை இல்லாதொழிக்கவும் தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சி முறை" ஒன்றை உருவாக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.195/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு விலக்களித்தல்,— இந்நாட்டின் விதிக்கப்பட்டுள்ள வரிகள் விசேடமாக இறுதியான நன்மைகள் மீதான வரிகள் மிகவும் சீரற்றதாகவுள்ளதாலும், ஊழியர்கள் கடின உழைப்பின் பின்னர் பெறும் அவர்களின் ஓய்வு பெற்று அவர்கள் பெறும் பணிக்கொடையானது 36% வரிக்கு உட்படுவதாலும் ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு முழுமையான விலக்களிப்பு அளிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.196/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுக்கு உதவுதல்,— இந்தியா இலங்கையின் நட்பு நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவுக்கு உதவ வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.197/ '13

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.198/ '13

கௌரவ புத்திக பதிரண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.199/ ' 13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— ஏற்றுமதி சந்தைக்காக தூரியான் பயிர்செய்தல்,— அதிக விலைமதிப்புள்ளதும் ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த கேள்வியைக் கொண்டதுமான பிரபல்யமான தூரியான் பழத்தை, நாடு கணிசமான அளவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டக்கூடியவாறு வர்த்தக ரீதியில் பயிர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.200/ ' 13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டுத் திட்டம்,— "மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டு திட்டம் 2012-2021" எனும் பத்தாண்டு கால அமைச்சரவைத் தீர்மானத்தை வரவேற்பதுடன் பன்மொழிப் பேசும் பல்லின மக்களின் முழு ஆதரவைப் பெற்று முழு நாட்டுக்கும் பயன்பெறக்கூடிய முறையில் அரச நிறுவனங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் விரிவாக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.201/' 14

கௌரவ புத்திக பதிரண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.202/' 14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.203/' 14

கௌரவ புத்திக பதிரண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.204/' 14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.205/' 14

கௌரவ புத்திக பதிரண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலயப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.206/' 14

கௌரவ புத்திக பதிரண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.208/ '14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.209/' 14

கௌரவ புத்திக பதிரண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.210/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.211/' 14

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.213/'14

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் பதவி வகிக்கும் அராங்க அதிகாரிகளுக்கான தண்டனை,— தமது சுயாதீனமான பதவிகளை துஷ்பிரயோகம் செய்து அரசியல் மயப்படுத்தும் உயர் பதவி வகிக்கின்ற அரசாங்க அதிகாரிகள் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தண்டிக்கப்படவும் அபராதம் விதிக்கப்படவும் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 214/ '14

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 215/ '14

கௌரவ புத்திக பதிரண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.216/'14

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.217/'14

கௌரவ புத்திக்க பதிரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.218/'14

கௌரவ புத்திக பதிரண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.219/'14

கௌரவ புத்திக பதிரண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.220/ '14

கௌரவ புத்திக பதிரண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.221/ '14

கௌரவ புத்திக பதிரண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 222/'14

கௌரவ புத்திக பதிரண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

P.223/'14

கௌரவ புத்திக பதிரண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

# 2014 ஓகத்து 19, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2675/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்குரிய சாத்தியவள கற்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கற்கைகளை மேற்கொள்வதற்காக குறித்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை அண்மித்த கடற்கரையில் கற்பாறையொன்று காணப்படுவதாக சாத்தியவள கற்கை அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கற்பாறையை தகர்ப்பதற்கு ஏற்கப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3277/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) வழங்கப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3627/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் சதுப்பு நிலக் காடுகளின் அளவு எவ்வளவு;

(ii) மேற்படி காடுகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) இலங்கையில் சதுப்பு நிலக் காடுகளில் வாழ்வதாக இனங்காணப்பட்டுள்ள விலங்கினங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி விலங்கினங்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான “சுவந்த” என்ற தாவரத்தின் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறெனின், அந்த நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3922/ '13

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரத்தில் சேருகின்ற குப்பை கூளங்கள் கண்டி கொஹாகொட பிரதேசத்தில் மகாவலி கங்கைக்கு அருகாமையிலுள்ள இடமொன்றில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்விடத்தில் விலங்குப் பண்ணையொன்று பேணிவரப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இடத்தில் விலங்குப் பண்ணையொன்றை பேணிவருவதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விலங்குப் பண்ணை உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) மேற்படி விலங்குப்பண்ணையின் உரிமையாளர் இந்த தொழில்முயற்சிக்கு மேலதிகமாக வேறு நிறுவனமொன்றில் தொழில் புரிவாராயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் அவர் வகிக்கும் பதவி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3943/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

4164/ ’13

கௌரவ பி. ஹரிசன்,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத மருத்தவர்கள் உள்ளடங்கும் வகுதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு வகுதிக்கும் உரிய மருத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த வகுதிகளிலுள்ள பொது வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் ஆயுர்வேத திணைக்களத்தினால் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மொத்த உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கை மற்றும் அவற்றின் முகவரிகள் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) ஆயர்வேத திணைக்களத்திற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களினால் உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பின், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆயுர்வேத உடல் பிடித்துவிடும் நிறுவனமொன்றை நடாத்துவதற்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறானதொரு நிலையமொன்றை நடாத்தும் இடமொன்றில் இருக்க வேண்டிய தரநியமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4318/’13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாண மக்களின் எழுத்தறிவு தொடர்பாக இறுதியாக ஆய்வு நடாத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் எழுத, வாசிக்க ஆற்றலுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் சனத்தொகையின் சதவீதம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 10 வயது வரையிலான சிறார்களில் ஆரம்பக் கல்விக்கு ஆற்றுப்படுத்தப்படாத சிறார்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே வினவப்பட்டுள்ள புள்ளிவிபர பெறுமானங்கள் போதிய மட்டத்தில் உள்ளதென கல்வி அதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதையும்;

(ii) எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான ஆற்றல் குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையை மாற்றுவதற்காக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4525/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட தண்டவாளங்களை விற்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப் பத்திரம் கோல்கள் நடைபெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தினத்திலும் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களின் படி விற்பனை செய்யப்பட்ட தண்டவாளங்களின் எண்ணிக்கை, தண்டவாளங்களை கொள்வனவு செய்த நிறுவனம் மற்றும் ஒரு கிலோ கிராமுக்கு செலுத்தப்பட்ட விலை ஆகியன வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4614/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் தற்போதைய தலைக்குரிய வருமானம் நியம அடிப்படையிலும் இலங்கை ரூபாய்களிலும் எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாட்டில் வருமானம் ஈட்டும் ஆட்களிடையேயுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில் தற்போதைய தலைக்குரிய வருமானத்துக்கு சமமான அல்லது அதை விட அதிகமான சம்பளத்தை பெறும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அது, ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கையில் சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4758/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமியோபதி மருத்துவச் சபை தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது ஹோமியோபதி மருத்துவச் சபை இயங்கி வருகின்றதா என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டளவில் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) ஹோமியோபதி மருத்துவ முறையை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு ஏதேனும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4903/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகளில் ஒரு குழுவினர் 2014 ஜனவரி 04 ஆம் திகதி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது இவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் மேற்குறிப்பிட்ட சிறைக்கைதிகளுக்கு வசிப்பதற்கு பொருத்தமான சூழல் இல்லையென்பதையும்;

(ii) இதனால் இவர்கள் கடுமையான சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி சிறைக்கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திகதி தொடக்கம் கடுமையான மனிதாபிமானமற்ற சித்திரவதைக்கு ஆளாகுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) சிறைக்கைதிகள் முகம் கொடுத்துள்ள மேற்படி நிலைமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4955/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வென்னப்புவ நகரத்திலிருந்து கிரிமெட்டியான வரையில் செல்லுகின்ற "அலுத் மாவத்த" எனும் வீதியில் ஹெமில்டன் கால்வாய்க்குக் குறுக்காக நிர்மாணிக்கப்படும் பாலத்தின் மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) இப்பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தினால் குறிப்பிட்ட நிர்மாணப் பணிகளுக்கு வேறு நிறுவனமொன்றுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இந்த உப மொத்தம் வழங்கல் முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறையின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்யும் நிறுவனம் யாது என்பதையும்;

(vi) இந் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ ( i ) இல் குறிப்பிட்டுள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுறும் வரை போக்குவரத்துக்காக தற்காலிக பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், வென்னப்புவ தொடக்க கிரிமெட்டியான வரை பயணிப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய தூரம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால் போக்குவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5024/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தயட்ட கிருள 2014இன் கீழ் வயம்ப பல்கலைக்கழக வளாகம், குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலய வளாகம் மற்றும் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டிட நிர்மாணிப்புகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்புகள் பிற கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அக் கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கட்டடத்திற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டனவா என்பதையும்;

(v) ஆமெனில், நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்ற போது பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2677/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் திறந்து வைக்கப்பட்ட திகதி தொடக்கம் இன்றுவரையிலான காலகட்டத்தினுள் இத்துறைமுகத்தின் மாதாந்த வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு மாதத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டபடி அறிக்கையிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தின் படி கிடைத்த இலாபம் அல்லது நட்டம் இத்துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் இலக்குகளுக்கு ஒப்பீட்டளவில் திருப்தியடையக் கூடிய மட்டத்திலுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3278/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) வழங்கப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2014 ஓகத்து 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2679/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'மில்கோ' நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் ஒன்றிணைந்து இந்நாட்டின் பால் உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர், நிறுவனத்தின் சகல சொத்துக்களையும் பிணையாக வைத்து, ரூபா 700 மில்லியனைச் செலவிட்டு, 'திரவப் பால்' பொதிசெய்யும் 2 இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மீண்டும் சுமார் ரூபா 40 மில்லியன் கடனாகப் பெறப்பட்டு, இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு 'மில்கோ' நிறுவனம் தயாராகி வருகின்றது என்பதையும்;

(iv) கடந்த டிசம்பர் முதல் இதுவரை மேற்படி நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய பணத் தொகைகளைச் செலுத்தியிருக்கவில்லை என்பதையும்;

(v) அதன் வழங்குனர்களுக்கு ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான பணத் தொகைகளை கடன்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஊழல்மிக்க அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு 'மில்கோ' நிறுவனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3279/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மற்றும் இற்றைவரையில் ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவரினால் (JAICA) இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) கொடுத்துதவப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3330/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில்,

(i) கற்பழிப்பு தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை என்பதையும்

வருடாந்தம் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட காலப்பகுதியில் கற்பழிப்பு மற்றும் பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அரசியலுடன் தொடர்புடைய நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இக்குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3923/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1985, 1995, 2005 மற்றும் 2012 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் இலங்கையில்,

(i) புற்றுநோய்க்கு இரையாகியுள்ள 01 மாதத்திற்கும் – 18 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஓர் இலட்சம் பேருக்கு ஒப்பீட்டளவில் எத்தனை பேர் புற்றுநோய்க்கு இரையாகியுள்ளனர் என்பதையும்;

(iii) ஓர் இலட்சம் பெண்களுக்கு ஒப்பீட்டளவில் எத்தனைப் பெண்களுக்கு புற்றுநோய் பீடித்துள்ளதென்பதையும்;

(iv) ஓர் இலட்சம் ஆண்களுக்கு ஒப்பீட்டளவில் எத்தனை ஆண்களுக்கு புற்றுநோய் பீடித்துள்ளதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் வருடாந்தம் மரணிப்பவர்களின் எண்ணிக்கையில் புற்றுநோய் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நிலைமையை குறைப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4225/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கை அரசாங்கத்தினால் சீன ஏற்றுமதி, இறக்குமதி வங்கியிலிருந்து (The Export - Import Bank of China) பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தொகைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு வருடமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தொகைகள், பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கடன் தொகைக்காகவும் செலுத்த வேண்டிய வட்டி வீதங்கள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4464/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்தில் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 11 பாதுகாப்பு அட்டைகளும் 02 மல்டி மீடியா கருவிகளும் காணாமற்போயுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இனங்காணப் பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இந்நபர்களால் ஏற்பட்டுள்ள நட்டம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்டம் பொலீசாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது குற்றவாளிகள் இனங்காணப்பட்டு உள்ளனரா என்பதையும்;

(ii) தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புடையதொரு நிறுவனத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான அரசின் நிலைப்பாடு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

4485/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பலாங்கொடை கல்தோட்ட மாவட்ட வைத்தியசாலை தற்போது சிதைவடைந்து மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) கல்தோட்ட மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மருத்துவ வசதிகளை பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வைத்தியசாலையில் பணியாட்டொகுதியில் கடும் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும், ஒழுங்காக சேவை வழங்குவதற்கு போதியளவு கட்டட வசதிகள் இல்லை என்பதையும் அவர் ஏற்றுகொள்வாரா;

(ii) மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iii) மேற்படி வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் திருத்தப்பட வேண்டிய கட்டடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பிரதேசத்தின் மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காக மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான பணியாட்டொகுதியினரையும் ஏனைய அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4526/ ’13

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், வெலன்கொல்ல வீடமைப்புத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வீடமைப்புத் திட்டத்துக்கு செலவாகிய பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒரு வீட்டின் விற்பனை விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4621/ ’13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) லேசர் கதிர்களை பயன்படுத்தி நிலத்தின் கீழ் காணப்படும் புதைபொருட்களை அவதானிக்கக்கூடிய ஓர் இயந்திரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப் பட்டுள்ளதென்பதையும், இது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இயந்திரத்தை இறக்குமதி செய்வதற்காக பாதுகாப்புத் துறையின் பலம்வாய்ந்த ஒருவரின் தலையீடு நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நபரின் பெயர் யாதென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்புத் துறையின் பலம்வாய்ந்தவரின் தலையீட்டின் காரணமாக மேற்படி இயந்திரம் தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி லேசர் இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்ட நாடு யாதென்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரத்திற்கு மேலதிகமாக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள இவ்வாறான இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரம் அல்லது இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நிலத்தின் கீழுள்ள புதைபொருட்களின் பாதுகாப்பிற்கு ஏதேனும் நிர்ப்பந்தம் ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்கேற்ப தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4632/ ’13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு அனுமதின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு அனுமதியின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படும் நாடுகள் யாவை ன்பதையும்;

(iii) அனுமதியின்றி இறக்குமதி செய்யப்படும் விதை வகைகள் யாவை என்பதையும்;

(iv) அனுமதியின்றி விதைகளைக் கொண்டுவருவதற்கான தேவைப்பாடு யாது என்பதையும்

(v) வெளிநாடுகளிலிருந்து விதைகளை இறக்குமதி செய்வதில் அரசு தலையீடு செய்வதிலுள்ள சிரமங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுமதியின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படுவதனால் விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இதைத் தடுப்பதற்கும் இது தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டுவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அனுமதியின்றி விதைகளை இறக்குமதி செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அனுமதியின்றி விதைகளை இறக்குமதி செய்பவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக மேற்படி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4759/ ’14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு பாற்பசுக்களை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு;

(ii) தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாற்பசுக்களின் எண்ணிக்கை யாது;

(iii) பால் மற்றும் இரட்டைப் பணிக்காக ஆடுகளை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு;

(iv) 2013 ஆம் ஆண்டளவில் மேற்படி ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4956/ ’14

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் பத்துலு ஓய—உடப்பு வீதியை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இக் கம்பனிக்கு நிர்மாணப் பணிகளை ஒப்படைக்கும் போது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதால் மக்கள் கடும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(ii) இவ்வீதியின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால் போக்குவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5026/ ’14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நுகர்வோர் இணையத்தின் ஊடாக கொள்வனவுக் கட்டளை அனுப்பி மருந்துகளை கொள்வனவு செய்யும் போக்கு அண்மைக் காலத்திலிருந்து வெகுவாக அதிகரித்துள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு சந்தைப்படுத்தப்படுகின்ற அநேகமான மருந்து வகைகள் இலங்கையில் பதிவு செய்யப்படாதுள்ளவை என்பதையும்;

(iii) இணையத்தின் ஊடாக கொள்வனவுக் கட்டளை அனுப்பி பெற்றுக் கொள்ளப்படுகின்ற மருந்துகள் பெரும்பாலும் மருத்துவர்களின் சிபாரிசு இன்றி பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இணையத்தின் ஊடாக உள்நாட்டு மக்களுக்குச் சந்தைப்படுத்தப்படுகின்ற மருந்துகள் தொடர்பில் முறைசார்ந்த ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு மேற்கொள்ளப்படும் மருந்துகளின் சந்தைப்படுத்தலை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற சட்ட ரீதியான இயலுமை இந்நாட்டின் சுகாதார அதிகாரிகளுக்கு உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மருத்துவர்களின் சிபாரிசு இன்றி இணையத்தின் ஊடாக மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பில் காணப்படும் அபாய நிலை தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மக்களை அது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2686/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கொழும்பு பல்கலைக்கழகத்திற்குரிய பீடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

(iii) இப்பீடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற அனைத்து தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கு போதியதாக உள்ளதா என்பதையும்

(iii) இப்பீடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3280/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) அவர்களுக்கான பயிற்சி வசதிகள் எங்கே வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்கு கொடுப்பனவா அல்லது சம்பளமா வழங்கப்பட்டது என்பதையும்;

(iv) பயிற்சிக் காலத்தின் அளவு மற்றும் அவர்களுக்கு பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர்கள் யார் என்பதையும்;

(v) பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(vi) 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் ஆட்சேர்க்கப்படவுள்ள பட்டதாரி பயிலுனர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்:

(vii) பட்டதாரி பயிலுனர்களின் தற்போதைய ஊதியம் மற்றும் எதிர்கால சம்பள அளவுத் திட்டம் ஆகியன யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 ஓகத்து 21, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2687/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது களணி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக் கழகத்துக்குரிய பீடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பீடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக களணிய பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட மேற்படி நிதி ஏற்பாடுகள் குறிப்பிட்ட கால எல்லையினுள் மேற்படி பல்கலைக் கழகத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு போதுமானதா என்பதையும்;

(iii) களணி பல்கலைக்கழகத்துக்குரியதாக திருப்தியடையக்கூடிய அளவு பௌதீக மற்றும் மனித வளங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3302/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் மற்றும் இற்றைவரையிலும் வீரவில விமானநிலையத்தின் நிர்மாணப் பணிக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாகவும்;

(ii) மேற்கூறப்பட்ட கருத்திட்டம் மேலும் நடைமுறைப்படுத்தப்படுமாவென்பதையும்;

(iii) இல்லையெனில், இக்கருத்திட்டத்தை இடைநிறுத்தியமைக்கான காரணங்களையும்;

(iv) மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தைக் கைவிட்டதன் விளைவாக இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பையும்;

(v) மேற்கூறப்பட்ட இழப்பிற்கு பொறுப்பான நபர் அல்லது நபர்களின் பெயர்களையும்;

(vi) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3908/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல நகரை அடுத்துள்ள தண்டுகம பிரதேசத்தில் கொண்டு நடத்தப்படும் விலங்குச் சாலைகளினதும் விலங்குகளை அறுக்கும் இடங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் நிதமும் குவிக்கப்படும் உயிர் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பில் நடைமுறையில் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கழிவுகள் தொடர்பில் ஏதேனும் சுற்றாடல் மற்றும் சுகாதார பேணல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிபாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3958/ '13

கௌரவ புத்திக பதிரண,— வன சீவராசிகள், வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் யானை – மனித மோதல் காரணமாக வருடாந்தம் பெருமளவு மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவ்வாறு இழக்கப்பட்டுள்ள மனித உயிர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் யானை – மனித மோதல்கள் காரணமாக அழிவடைந்துள்ள மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மிதிகம அரச வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற மருத்துவர் டாக்ரர் சரத் விமலசூரிய யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக மின்சார வேலியொன்றை உருவாக்கியுள்ளார் என்பதையும்;

(ii) இந்த உபகரணத்தை பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக வனசீவராசிகள் அலுவலர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) அது இன்றுவரை திருப்பிக் கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) திரு. சரத் விமலசூரிய குறைந்த செலவில் உருவாக்கியுள்ள மின்சார வேலியை பரிசோதனை செய்து அதனை யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4465/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி 2010/2011 ஆம் ஆண்டில் பெற்ற தேறிய நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஆண்டின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வை மேற்கொண்ட பட்டயக் கணக்காய்வாளர்களான 'பிரய்ஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்' நிறுவனம் மிஹின் லங்கா கம்பனியின் இருப்பு தொடர்பானதொரு கருத்தை முன்வைத்துள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிறுவனம் முன்வைத்துள்ள கருத்தில் 'ஒரு வருடத்தில் மிஹின் லங்கா கம்பனி ரூபா 940.49 மில்லியன் நட்டத்தைக் காட்டியுள்ளதுடன், நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,083.92 மில்லியனால் நடைமுறைச் சொத்துக்களைத் தாண்டிச் சென்று ருபா 3,814.45 மில்லியன் எதிர் மறையான தேசிய பெறுமானத்தைக் காட்டுவதன் மூலம் கம்பனியை இயங்கும் நிலையிலான தொழில் முயற்சியொன்றாக தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கான ஆற்றல் தொடர்பில் சந்தேகமான நிலையை காட்டுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இந்நிலைமையில் வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனியைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கு பொதுமக்களின் பணத்தை ஈடுபடுத்துவது பயனற்றதென்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4527/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,—சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையினுள் உடல் பிடித்துவிடும் நிலையங்களை நடாத்திச் செல்வதற்கு சுதேச மருத்துவ அமைச்சினால் சட்டரீதியான அனுமதி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதியின் கீழ் தற்போது மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ள உடல் பிடித்துவிடும் நிலையங்களை நடாத்திச் செல்கின்றபோது பின்பற்ற வேண்டிய சட்டவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4571/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான காலப் பகுதியினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஒவ்வொரு துறைமுகத்துக்கும் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையும் பரிமாற்றப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு துறைமுகத்தினதும் தொழிற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை துறைமுக அதிகாரசபை ஒட்டுமொத்தமாக மேற்படி காலப்பகுதியில் பெற்ற வருமானம் மற்றும் இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4622/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை விமான நிலையம், அம்பாந்தோட்டை (சூரியவெவ) கிரிக்கட் மைதானம், திருகோணமலை மின் உற்பத்தி நிலையம், சம்பூர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் நிர்மாணிப்புகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கேள்விபத்திரம் கோரப்படாது மேற்படி கருத்திட்டங்களுக்குரிய நிர்மாணிப்புகள் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றபோது பாரியளவு தரகுத்தொகை பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) சீனாவின் கடன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் மேற்படி சகல கருத்திட்டங்களுக்குமான கடன் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ள சராசரி வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4633/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் முதலாவது HIV தொற்றுக்கு ஆளானவர் கண்டுபிடிக்கப்பட்ட வருடத்தை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட திகதி முதல் இற்றைவரை HIV தொற்றியவர்களின் வருடாந்த வளர்ச்சியையும்;

(ii) HIV தொற்றியவர்களின் வருடாந்த வளர்ச்சி மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

(iii) HIV தொற்றுக்குக் காரணமான பிரதானமான காரணிகளையும்;

(iv) இக்காரணிகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) HIV தொற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) HIV தொற்றிய ஒரு தாயின் வயிற்றிலுள்ள சிசுவுக்கு HIV தொற்றாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை யாவையென்பதையும்;

(iii) இந்நோய் இலங்கையில் பரவுவதற்கான பிரதானமான காரணிகள் யாவை என்பதையும்

(iv) HIV பரவுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4760/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவு காணச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) திரவப் பாலின் மூலம் பால் மா உற்பத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தின் உற்பத்தி இயலளவை மேம்படுத்துவதற்காக ஏதேனும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4906/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஜனவரி மாதமளவில் ஓய்வூதியத் திணைக்களத்தில் ஓய்வூதிய பணிக்கொடை பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்த ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களுக்கு ஓய்வூதிய பணிக்கொடையைச் செலுத்துவதில் ஏதேனும் தாமதம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு பணிக்கொடை முற்பணம் செலுத்துவதற்காக வருடாந்தம் பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓய்வூதிய சுற்றறிக்கை 2/2014 இற்கு அமைய இதுவரை ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஓய்வூதியப் பணிக்கொடை முற்பணத்தை எதிர்காலத்தில் வங்கிகளின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4957/ '14

கௌரவ நிரோஷன் பெரேரா,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் பிரதேசத்தில் தற்போது செயற்படும் பதிவு செய்யப்பட்ட உப்பளங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த உப்பளங்களின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் உப்பின் அளவு எத்தனை மெட்ரிக் தொன் என்பதையும்;

(iii) புத்தளம் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு, தேசிய உப்புத் தேவையில் எத்தனை சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உப்பு உற்பத்தி நிறுவனங்களுக்கு அரச காணிகள் ஏதேனுமொரு அரச கொள்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்காணிகள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள், ஒவ்வொரு கம்பனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு மற்றும் இக்காணிகளுக்கான அரச விலை மதிப்பீட்டுப் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அரச காணிகள் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படுகையில் ஒரு சில கம்பனிகளுக்கு விசேட சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5027/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது உள்நாட்டுச் சந்தையில் சந்தைப்படுத்தப்படும் தெம்பூட்டும் பானங்கள் (Energy Drinks) வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பானங்களிடையே காணப்படுகின்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பானங்கள் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தெம்பூட்டும் பானங்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினைத் தீர்மானிக்கும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டினுள் தெம்பூட்டும் பானங்கள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2688 / '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது றுஹுனு பல்கலைக்கழகத்தில கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சேவையாற்றுகின்ற கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக றுஹுனு பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக் கழகத்தின் மூலமாக மாணவர்களுக்கு உயர் தரத்திலான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி நிதி ஏற்பாடுகள் போதுமானதாயுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பல்கலைக் கழகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினருக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1960 முதல் 2000 வரையிலான மற்றும் 2000 முதல் 2012 வரையிலான தசாப்தங்களின் ஆரம்பம் முதல் இற்றைவரை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை, மொறட்டுவ, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்காக பெறப்பட்ட சர்வதேச தரப்படுத்தல் என்னவென்பதை தனித்தனியாக இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பல்கலைக்கழகங்களுக்காக வெளிநாட்டு விரிவுரையாளர்கள் பரஸ்பர பரிமாற்றல் அடிப்படையிலா ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கடந்த இரண்டு வருடங்களில் அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட திகதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஆகியன யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கடந்த 5 வருடங்களாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலுமுள்ள பீடம் ஒன்றுக்கான செலவினத்தையும் மற்றும் மாணவர் ஒருவருக்கான செலவினத்தையும் வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) அன்றுள்ளவாறு, விடுதிகளைப் பெற்றுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iii) குறிப்பிடப்பட்ட வசதிகள் இலவசமாகவா அல்லது கொடுப்பனவின் அடிப்படையிலா வழங்கப்படுகின்றன என்பதையும்

(iv) விடுதி வசதிகளை வழங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் தகவு திறன்கள் எவை என்பதையும்

(v) விடுதி வசதிகள் இல்லாத மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்று ஏற்பாடுகள் எவை என்பதையும்;

(vi) சகல மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நீண்டகால உபாயங்கள் என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2014 ஓகத்து 22, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2689/'12

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற கல்விசார் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டிற்காக இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிலவும் பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் போதுமானதா என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இத்திட்டத்திற்குரிய வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3307/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் சேவையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கையை இற்றைவரையிலும் ;

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்களையும்;

(iii) இவ்வலுவலர்களால் ஆற்றப்படும் சேவைகளையும்;

(iv) ஒரு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரின் மாதாந்த சம்பளம் மற்றும் மேலே சொல்லப்பட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து சமுர்த்தி அலுவலர்களின் சம்பளக் கொடுப்பனவுக்காக செலவிடப்படும் மாதாந்த பணத் தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) கொழும்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் ஆற்றப்படும் சேவை போதுமானதாகவுள்ளதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3959/ '13

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாநகர சபையினால் கொஹாகொட பிரதேசத்தில் அகற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர் களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித் தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் பிறிதொரு நிறுவனத்தில் பதவியொன்றை வகிக்கின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது வேறொரு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந் நிறுவனங்களின் பெயர்கள் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கும் கண்டி மாநகர சபைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி குத்தகை உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் தவறவிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பின், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4174/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 யூலை மாத இறுதியளவில் அரச பல்கலைக்கழகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு கல்விசாரா பதவியணியையும் சேர்ந்த ஊழியர் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) பல்கலைக்கழக கல்விசாரா பதவியணி ஊழியர்களின் ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய ஆகக்குறைந்த சம்பள அளவு யாது;

(iii) மேற்படி கல்விசாரா ஊழியர்களின் சம்பள ஏற்றங்கள் அமைந்துள்ள விதம் யாது;

(iv) கல்விசாரா ஊழியர்களின் பல்வேறு சம்பளப் படிநிலைகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் யாவை;

(v) தற்போது கல்விசாரா பதவியணிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4466/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Hedges Strategies எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4623/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஷ்ய தூதரகத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை தனியார் காணியொன்றை சுவீகரித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iii) ரஷ்ய தூதரகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) தனியார் காணியொன்றை சுவீகரித்து வேறொரு நிறுவனத்திற்கு விற்பனை செய்தலானது நாகரீகமானதொரு செயலாகுமா என்பதையும்;

(v) சுவீகரிக்கப்பட்ட காணிகளை, நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பொதுப் பணியொன்றுக்காகவன்றி வேறொரு பணிக்காகப் பயன்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி காணி சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் இக்காணிகளில் வசித்தவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4634/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், வெளிநாட்டு சந்தைக்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் விதை நெல் தற்போது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விதை நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்ணைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள பாஸ்மதி வகைகள் உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பாஸ்மதி வகைகளை பயிரிடும் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், பாஸ்மதிக்காக செலுத்தப்படுகின்ற விலை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பாஸ்மதி வகைகளை கொள்வனவு செய்வதற்காக அரசாங்க நிலையமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4761/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் 2012 ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) சுய தொழிலாக சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கானதொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4817/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தெதுறுஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்துடன் தொடர்புடையதாக சிறிய நீர் மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிக்க உத்தேசமாயுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனூடாக உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்ற மின்சாரத்தின் கொள்ளளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது மேற்படி மின்உற்பத்திக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாது என்பதையும்;

(vi) இவ்வாறு உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்ற மின்சாரத்தை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், ஒரு அலகு மின்சாரத்தை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4907/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மொத்த தடுப்புக்கைதிகளின் எண்ணிக்கையையும்;

(ii) இவர்களில் சந்தேகநபர்களாக அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கையையும்;

(iii) சிறைக்கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹர சிறைச்சாலையில் "எல்" மற்றும் "என்" ஆகிய தடுப்புக் கூடங்கள் இரண்டும் சந்தேகநபர்களைத் தடுத்துவைக்க பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி கூடங்களில் அதிக நெருக்கடி நிலவுகின்றதென்பதையும்;

(iii) அங்கு மலசலகூட வசதிகளும், அருந்துவதற்கும் நீராடுவதற்கும் அவசியமான நீர் வசதிகளும் ஆகக்குறைந்த மட்டத்தில் நிலவுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி நிலைமைகள் காரணமாக அந்தக் கூடங்களில் தடுப்புக்கைதிகள் மிகவும் துன்பகரமான நிலைக்கு ஆளாகியுள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கும் இடங்களில் நிலவுகின்ற நெரிசலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மஹர சிறைச்சாலையின் தற்போதய அத்தியட்சகரின் பெயர் யாது;

(ii) மேற்படி சிறைச்சாலையில் பணியாற்றுகின்ற மொத்தப் பதவியணி எவ்வளவு;

(iii) மஹர சிறைச்சாலையின் அத்தியட்சகர் உள்ளிட்ட பதவியணியினர் அங்குள்ள தடுப்புக்கைதிகளை மனிதாபிமானமற்ற வகையில் நடத்துவதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் ஏதேனும் உண்மை உள்ளதா;

(iv) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5028/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகின்ற போது சத்துணவு வல்லுநர் ஒருவரால் ஆற்றப்படுகின்ற பணிகள் யாவை என்பதையும்;

(ii) சுகாதார சேவையினுள் இருக்க வேண்டிய சத்துணவு வல்லுநர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது அரசாங்க மருத்துவமனைகளில் சேவையாற்றுகின்ற சத்துணவு வல்லுநர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்க மருத்துவமனைகளுக்குத் தேவையான அளவு சத்துணவு வல்லுநர்களை இதுவரை ஆட்சேர்க்காதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) நோயாளர்களுக்கு மிகச் சிறந்ததொரு மருத்துவ சேவையை வழங்கும் பொருட்டு தேவையான அளவு சத்துணவு வல்லுநர்களை துரிதமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2690/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரட்டுவை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக் கழகத்தின் ஸ்தாபகர்கள் யாவரென்பதையும்;

(iii) தற்போது இப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டிற்காக மொரட்டுவை பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்திற்கு 2011 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்தொகைக்கு ஒப்பீட்டளவில் இப் பணத்தொகை அதிகரித்துள்ள அல்லது குறைவடைந்துள்ள அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு தரம்வாய்ந்த வகையில் கல்வி புகட்டுவதற்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3308/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியல்வாதிகள் அல்லது அரசாங்க அலுவலர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களுக்கான செலவினங்களை இலங்கைத் தூதரகங்கள் தூதரக நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அத்தகைய செலவுகளுக்காக சம்பந்தப்பட்ட தூதரகங்களினால் கடந்த ஆறு வருடங்களுக்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) மேற்கூறிய கொடுப்பனவுகளை மேற்கொண்டதற்கான நோக்கத்தையும்;;

(iv) அத்தகைய கொடுப்பனவுகளுக்கான காரணங்கள் தனிப்பட்டவையா அல்லது உத்தியோகபூர்வமானவையா என்பதையும்;

(v) அவை தனிப்பட்ட காரணங்களுக்காகவெனின், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட நபர்களையும்;

(vi) அத்தகைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதியையும் கொடுப்பனவுகளுக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3960/ '13

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் கீழுள்ள தோட்டங்களிலிருந்த சுமார் 300 கறவை மாடுகள் போலியான கேள்விப்பத்திரம் கோரப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளில் கறவைப் பசுக்களும், கன்றுக் குட்டிகளும், சினைப் பசுக்களும் இருந்தனவென்பதையும்;

(iii) அரச சட்ட விதிகளுக்கமைய இறைச்சிக்காக காளை மாடுகளை மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு விற்பனை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மாட்டினதும் வயது மற்றும் நிறை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளை கொள்வனவு செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4178/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட z-core பிரச்சினை காரணமாக கல்வியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கும் போது சிக்கலான நிலை தோன்றியமையை அறிவாரா என்பதையும்;

(ii) கல்வியல் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்ப்பு தொடர்பாக வர்த்தமான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமான அறிவித்தல்களின் இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி வர்த்தமான அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(v) தற்போது கல்வியல் கல்லூரிகளுக்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அவற்றில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?